INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்

✦ மொட்டு 14 ✦ மலர் 41
–தனிச்சுற்றுக்கு மட்டும்–
மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்ச்சி இதழ்
✦ ஜனவரி - மார்ச் 2022

PINNACLE AWARDS 2021

vikatan




மேதகு தெலுங்கானா மாநில ஆளுநர்
டாக்டர் **தமிழிசை சௌந்தர்ராஜன்** அவர்களிடமிருந்து
விருதைப் பெறும் ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர்

ஐ.வி.டி.பி. நிறுவனர் தலைவர்

திரு. **குழந்தை பிரான்சிஸ்**

முன்னெடுத்த சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பாராட்டி

**“சிறந்த சமூக செயற்பாட்டாளர்”**

விருது வழங்கி கௌரவித்தது

**விகடன்.**

# பொருளடக்கம்...



வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி 05


ஐ.வி.டி.பி.யின் கல்விப்பணிகள் 10


ஐ.வி.டி.பி. விதவை உறுப்பினர் மற்றும் பணியாளர் குழந்தைகள் கல்வி உதவித்தொகை 07


ஐ.வி.டி.பி.யின் கல்விச் சேவைகள் 14


பொங்கல் பரிசு 08


ஐ.வி.டி.பி.யின் சமுதாயப் பணிகள் 22


தையல் இயந்திரங்கள் & உபகரணங்கள் 09



கவிதைத் துளிகள் 26


## கோசலை விருது



இவ்வாண்டு (2021-2022) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகள் நடைபெறின் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு **"கோசலை தங்கப் பதக்க விருது"** வழங்கப்படும்.

பின்குறிப்பு : தேர்வு நடைபெறாமல் அனைவரும் தேர்ச்சி என்று அறிவிக்கப்பட்டால் கோசலை விருது வழங்கப்படாது.



# நிறுவனர் இதயத்திலிருந்து

*அன்பு சுய உதவிக்குழு உறுப்பினர்களே! பணியாளர்களே!*

வணக்கம். ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு முனைகளிலும் தனது பணிகளையும், சேவைகளையும் வழங்கி வரும் நமது ஐ.வி.டி.பி நிறுவனம், கடந்த 2021-22 ஆண்டிலும் பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டைச் சற்றே திரும்பி நோக்கும் போது, நமது நாடும், நாட்டு மக்களும் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி, சந்தித்த சமூக, பொருளாதார மற்றும் தனிமனித இழப்புகள் ஏராளம். இவற்றையெல்லாம் நம் உறுப்பினர்கள் எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து வருவது மெச்சத்தக்கது.

கொரோனாவால் தங்கள் துணையை இழந்து திகைத்து நின்ற 370 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 50000/- என ரூ. 1.90 கோடியை வழங்கி, அவர்களின் துயரத்தில் ஐ.வி.டி.பி-யும் பங்கேற்றது சற்றே ஆறுதலாயுள்ளது. அதுமட்டுமல்லாது பல்வேறு வகைகளில் மொத்தம் ரூ. 3.72 கோடியை கொரோனா நிவாரணப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி செலவிட்டது குறிப்பிடத்தக்கது.

நாட்டிலேயே முதன்முறையாக சுய உதவிக்குழுக்களுக்கென்றே **ரூ. 9.40 கோடி** செலவில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த தொழிற்பயிற்சி மையம் முழு அளவில் இவ்வாண்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. எட்டு கிளை அலுவலகங்கள், தனி வங்கிக்கிளை மற்றும் தொழிற்பயிற்சிகள் என மையம் சிறப்புற செயல்பட்டு வருவது கண்டு வியக்காதவர் எவருமில்லை.

**நம் பணியாளர்களின் அயராத பணிகளின் விளைவாக நமது சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை 15,355 ஆகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 2,74,353 ஆகவும் உயர்ந்துள்ளது.**

**சென்ற நிதியாண்டில் நம் உறுப்பினர்கள்**

**ரூ. 767.25 கோடியை வங்கிக் கடனாகவும்,**

**ரூ. 308.91 கோடியை சங்கக் கடனாகவும்,**

**ரூ. 22.79 கோடியை சுகாதாரக் கடனாகவும்**

**ரூ. 37.21 கோடியை ஐ.வி.டி.பி. சுழற்சி நிதியாகவும்**

**என மொத்தம் ரூ. 1136.16 கோடியை**


**கடன் சுழற்சி செய்து, தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.**

இவ்வாண்டு சிறப்பு பணியாக இருளர் இன மக்களுக்கான மேம்பாட்டு பணிகளைத் துவங்கி, முதற்கட்டமாக **ரூ. 1.22 கோடி** மதிப்பிலானப் பொருட்களை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். மேலும் நாம் வழக்கமாக செய்து வரும் கல்வி, சமூக மேம்பாட்டுப் பணிகள், உறுப்பினர் மற்றும் பணியாளர் நலன் சார்ந்த பணிகளுக்காக **ரூ. 26.43 கோடியை** கடந்த ஆண்டில் செலவிட்டுள்ளோம் என்பதையும் இந்நேரத்தில் குறிப்பிட விழைகிறேன்.

இங்ஙனம் நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் ஒழுங்காக கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகளுடன் செயல்பட்டு வரும் நமது குழுக்களை வரும் காலங்களிலும் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

இந்த ஒரே நோக்கத்தை இலக்காகக் கொண்டு இணைந்து பயணிப்போம்! மகளிர் வாழ்வை வளமாக்குவோம்!

என்றும் மக்கள் பணியில்...



"இராமன் மகசேசே"
**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் / தலைவர்

PINNACLE AWARDS 2021

விகடன்

ஐ.வி.டி.பி. நிறுவனர் தலைவர்

## திரு. குழந்தை பிரான்சிஸ்

முன்னெடுத்த சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பாராட்டி

## "சிறந்த சமூக செயற்பாட்டாளர்"

விருது வழங்கி கௌரவித்தது விகடன்.

தலைவர்கள் பிறப்பால் உருவாவதில்லை... மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் துணியும் அந்தத் தருணத்தில் மகத்தான ஒரு தலைவன் பிறக்கிறான்!

கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான **'Integrated Village Development Project'**-ஐ தொடங்கியவர் குழந்தை பிரான்சிஸ். 1979-ம் ஆண்டிலிருந்து இதுவரை 15,000-க்கும் மேற்பட்ட பெண்கள் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, 3 லட்சத்துக்கும் மேற்பட்ட எளிய குடும்பத்துப் பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றியுள்ளது இந்த அமைப்பு.

சமூக மேம்படுத்தல் மற்றும் ஊரக மேலாண்மையில் உயர்கல்வி கற்றுள்ள **குழந்தை பிரான்சிஸ்** தன் வாழ்நாளையே சமூக முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்துள்ளார். இரவுப் பள்ளிக்கூடம், முதல் உதவி நிலையம் என்று சிறியதாய் தொடங்கிய இவரின் பயணம் இன்று கிராமப்புறங்களில் தடுப்பணைகள் கட்டுதல், பெண்கள் முன்னேற்றம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வீட்டு வசதி, கல்வி உதவி என்று பல்கிப் பெருகியுள்ளது.

**குழந்தை பிரான்சிஸ்** அவர்களின் சமூக சேவையைப் பாராட்டி மிக உயரிய விருதான **ராமோன் மகசேசே விருது 2012**-ம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் குழந்தை பிரான்சிஸ் முன்னின்று நடத்திய சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பாராட்டி அவருக்கு, 2021-ம் ஆண்டுக்கான **'சிறந்த சமூக செயற்பாட்டாளர்'** எனும் **Pinnacle Award** வழங்கி கௌரவித்தது விகடன்!






**ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களில்**
**2021 ஆம் ஆண்டில்**
**மறைந்த 1702 உறுப்பினர்களின்**
**வாரிசுகளுக்கு**

**₹ 9.36 கோடி**

IVDP

# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் இயற்கையாகவோ அல்லது விபத்துகளினாலோ இறந்தால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு **ரூ.50,000/-**மும் விபத்து போன்ற காரணங்களால் நிரந்தர ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு **ரூ.25,000/-**மும் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி உறுப்பினர்கள் மரணமடையும் போது அவர்களின் இறுதிச் சடங்கிற்காக உடனடியாக **ரூ.5,000/-** வழங்கப்படுகிறது.




❝ இழப்புகள் தான் பல வலியையும் சில வலிமையையும் தருகின்றன. ❞




அதன்படி கடந்த **2021** ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களிலிருந்து பல்வேறு காரணங்களினால் மரணமடைந்த **1702** உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா **ரூ.50,000/-** என மொத்தம் **ரூ.9.36 கோடி** வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டது. இந்நிதி மறைந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலாகவும், அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடுகட்டவும் பயன்படுகிறது.






**2001 ஆம் ஆண்டு முதல் ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் இதுவரை ₹ 47.36 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**



“ தனியே நின்றாலும் தன்மானத்தோடு நிற்பதில் தவறில்லை. ”

# ஐ.வி.டி.பி. விதவை உறுப்பினர் மற்றும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை

# ₹ 12.90 இலட்சம்



ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களில் தங்கள் கணவரை இழந்த உறுப்பினர்களின் **74 குழந்தைகளுக்கு** தலா **ரூ. 10,000/-** என மொத்தம் **ரூ. 7.40 இலட்சம்** கல்வி உதவித் தொகை.




ஐ.வி.டி.பி பணியாளர்களில் 5 வருடங்களாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் பணியாளர்களின் **55 குழந்தைகளுக்கு** தலா **ரூ. 10,000/-** என மொத்தம் **ரூ. 5.50 இலட்சம்** கல்வி உதவித் தொகை.

❝ ஆயிரம் உறவுகள் தரமுடியாத பலத்தை ஒரு அவமானம் பெற்றுத் தரும்! ❞

## ஐ.வி.டி.பி. பணியாளர்களுக்கு

# பொங்கல் பரிசு

**₹ 6.93 இலட்சம்**

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், ஆண்டுதோறும் தனது பணியாளர்கள் பொங்கல் விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடும் பொருட்டு, பொங்கல் பரிசுகளை வழங்கி வருகிறது.



அவ்வகையில் இந்தாண்டும் பொங்கல் விழாவின் போது **440 பணியாளர்களுக்கு** தலா **ரூ. 975/-** மதிப்பிலான **25 கிலோ அரிசி** மற்றும் தலா **ரூ.600/-** மதிப்பிலான **பொங்கல் தொகுப்பு** என **ரூ. 6.93 இலட்சம்** மதிப்பிலான பொங்கல் பரிசுகளை வழங்கியது.

## ஐ.வி.டி.பி. பணியாளர்களுக்கு

# ஓவர் கோட்

**₹ 6.36 இலட்சம்**

ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் **400 பணியாளர்கள்** தங்கள் பணியின் போது அணிந்துகொள்ள ஏதுவாக **ரூ. 6.36 இலட்சம்** மதிப்பிலான **ஓவர் கோட்டுகள்** வழங்கப்பட்டது.





“தெளிவாக செய்யாத காரியங்கள் அனைத்தும் வலுவாக இருப்பதில்லை.”

## ஐ.வி.டி.பி. தொழில் பயிற்சி மையத்தில்

## தையற் பயிற்சிப் பெற்றவர்களுக்கு

# தையல் இயந்திரங்கள் & பயிற்சி உபகரணங்கள்

**₹ 73 ஆயிரம்**




ஐ.வி.டி.பி நிறுவனம், அண்மையில் துவங்கிய தொழிற்பயிற்சி மையத்தில், முதல் பயிற்சியாக கிருஷ்ணகிரி இந்தியன் வங்கி ஊரக சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக 31 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு 30 நாட்கள் தையற்பயிற்சி வழங்கப்ப்பட்டது.

அவர்கள் பயிற்சியை நிறைவு செய்ததையடுத்து, ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு.குழந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் சான்றிதழ்களும் அப்பயிற்சியில் **முதல்** நான்கு இடங்களைப் பெற்ற பயிற்சியாளர்களுக்கு **ரூ.25 ஆயிரம்** மதிப்பிலான நான்கு தையல் இயந்திரங்களையும் வழங்கினார்.

மேலும் **இரண்டாவது பயிற்சி**யில் சிறப்பான முறையில் பயிற்சி பெற்ற ஒருவருக்கு **ரூ, 6,200** மதிப்பிலான தையல் இயந்திரமும்,

**4வது பயிற்சி**யில் பங்கேற்ற 30 உறுப்பினர்களுக்கு தலா **ரூ. 1400** என மொத்தம் **ரூ. 42,000** மதிப்பிலான தையல் பயிற்சி உபகரணங்களையும் ஊக்கப்பரிசாக வழங்கினார்.



# கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளிக்கு

## ஐ.வி.டி.பி.யின் கல்விப் பணிகள்

**₹ 7.15 இலட்சம்**

கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் பள்ளியின் நூலகத்தை மேம்படுத்தும் நோக்கில் **₹ 23,500** மதிப்பில் **நூலகத்திற்கு தேவையான 169 புத்தகங்கள்.**





கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் பள்ளியில் **1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 62 ஏழை எளிய மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ₹ 2.28 இலட்சம்.**

நேதாஜி பள்ளியின் **அறிவியல் ஆய்வக உபகரணங்கள்** மற்றும் **தளவாடப் பொருட்களுக்காக ₹ 2 இலட்சம்**



பள்ளியின் நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுக்க பயன்படும் வகையில் **₹ 1 இலட்சம்** மதிப்பிலான **கெனான் கேமரா.**

நேதாஜி பள்ளியின் கலையரங்கத்திற்கு **₹ 1.63 இலட்சம்** மதிப்பிலான **300 நாற்காலிகள்.**

# பெற்றோர்களை இழந்த 128 கல்லூரி மாணவர்களுக்கு

## கல்வி உதவித்தொகை

**₹ 9.72 இலட்சம்**



நாமக்கல் மாவட்டம், மெட்டாலா இலயோலா கல்லூரியின்
**58 மாணக்கருக்கு ₹ 4.42 இலட்சம்** கல்வி உதவித்தொகை

திருவண்ணாமலை மாவட்டம்,
வேட்டவலம்
இலயோலா கல்லூரியின்
**70 மாணக்கருக்கு**
**₹ 5.30 இலட்சம்**
கல்வி உதவித்தொகை



"துணியாத வரை வாழ்க்கை பயங்காட்டும், துணிந்து பார் வாழ்க்கை வழி காட்டும்."

# ₹ 2.34 இலட்சம்

# அரசுப் பள்ளியில் பயின்று மருத்துவப்படிப்பில் சேர்ந்த 9 மாணவர்களை ஊக்கப்படுத்தி ஊக்கத்தொகை & பரிசுகள்



கடந்த ஆண்டு அரசுப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் படித்து வரும் மாணவர்களில் இருந்து மருத்துவப் படிப்பில் சேர சிறப்புப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு **ரூ. 4 இலட்சம்** மதிப்பிலான **NEET** தகுதித் தேர்விற்கானப் புத்தகங்களை வழங்கி, மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் ஊக்குவித்தார்.

அம்மாணவர்களில் **NEET** தகுதித் தேர்வில் சிறப்பான வெற்றி பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பில் சேர்ந்த **9 மாணவர்களுக்கு** தலா **ரூ. 20,000/- ஊக்கத்தொகையும்** தலா **ரூ. 4,750/-** மதிப்பிலான **1 கிராம் தங்க நாணயங்களும்,** தலா **ரூ. 1,200** மதிப்பிலான **புத்தகப்பைகள்** என ஒவ்வொரு மாணவருக்கும் தலா **ரூ. 25,950/-** மதிப்பில், மொத்தம் **ரூ. 2.34 இலட்சம்** மதிப்பிலான ஊக்கத்தொகையையும், பரிசுகளையும் ஐ.வி.டி.பி. நிறுவனர் வழங்கி பாராட்டினார்.

## தாயின் கனவு நனவானது...



**மருத்துவப் படிப்பில்** சேர்ந்த **மோனிஷா**வை பாராட்டி **ரூ. 20,000** மற்றும் ஊக்கப்பரிசுகளை வழங்கும் ஐ.வி.டி.பி. நிறுவனர்

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, காரிமங்கலம் கிளை, **வசந்தமுல்லை மகளிர் மன்றத்தைச் சார்ந்த கஸ்தூரி** என்பவர், தன் மகளுக்கு மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் **MBBS** படிப்பிற்கான சேர்க்கை கிடைத்ததை எண்ணி தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டு கூறியதாவது,

**நான் ஐ.வி.டி.பி. மகளிர் மன்ற**த்தில் கடந்த 9 வருடங்களாக உறுப்பினராக இருந்து வருகிறேன். என்னுடைய கணவர் 2017 ஆம் ஆண்டு உடல்நலக் குறைவால் என்னையும், என்னுடைய இரண்டு பெண் குழந்தைகளையும் தவிக்கவிட்டு இறந்து விட்டார். அன்றாட கூலி வேலைக்கு செல்லும் என்னால் எனது மகள்களைப் படிக்க வைக்க முடியாமல் வேதனைப் பட்டேன்.

அப்போது தான் ஐ.வி.டி.பி யின் மூலம் சங்கக் கடன், விதவை உறுப்பினர் கல்வித்தொகை என பல வகைகளில் உதவிகள் கிடைத்தது. இதனால் என்னுடைய மூத்த பெண்ணிற்கு நல்ல முறையில் திருமணம் முடித்து, இளைய மகளான **மோனிஷா**வை நன்றாக படிக்க வைக்க முடிந்தது. அரசுப் பள்ளியில் படித்து, இன்று மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் **MBBS** படிப்பிற்கு இடம் கிடைத்துள்ளது.

**இதற்கெல்லாம் முக்கியக் காரணமாக இருந்த ஐ.வி.டி.பி நிறுவனத்திற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். என் உயிர் உள்ளவரை ஐ.வி.டி.பி நிறுவனர் செய்த உதவியை நானும் எனது மகளும் மறக்க மாட்டோம் எனத் தெரிவித்தார்.**

■ திருமதி. **கஸ்தூரி,** வசந்தமுல்லை, மகளிர் மன்றம், காரிமங்கலம் கிளை 2.



"இல்லாத போது தேடல் அதிகம்... இருக்கின்ற போது அலட்சியம் அதிகம்... இதுதான் வாழ்க்கை"

# வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும்
## 221 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

**₹ 14.07 இலட்சம்**



வேட்டவலம், இலயோலா கல்லூரியில் ஏழ்மை நிலையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் **100 மாணவர்கள்** தங்களது உயர்கல்வியைத் தொடர **தலா ரூ. 5,000** என மொத்தம் **ரூ. 5 இலட்சம்** கல்வி உதவித்தொகையை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார்.

திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் **60 மாணவிகளுக்கு** தலா **ரூ. 7,500** என மொத்தம் **ரூ. 4.5 இலட்சம்** கல்வி உதவித்தொகையை வழங்கியது ஐ.வி.டி.பி.





ஒசூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் **61 மாணவிகளுக்கு** தலா **ரூ. 7,500** என மொத்தம் **ரூ. 4.57 இலட்சம்** கல்வி உதவித்தொகையை வழங்கியது ஐ.வி.டி.பி.

# அரசுப் பள்ளிகள் மேம்பாட்டிற்காக பேவர் பிளாக் தரை

## ₹ 2.30 இலட்சம்

கல்வி என்பது குழந்தைகளை உடல் மற்றும் மன வளர்ச்சியோடு, அறிவு, நல்லொழுக்கம் ஆகியவற்றையும் வளர்ப்பதாகும். அவ்வகையில் அரசுப் பள்ளி வளாகங்களைத் தூய்மையாக பராமரிக்க ஏதுவாக, இரண்டு அரசுப் பள்ளிகளுக்கு பேவர் பிளாக் தரை வசதியை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.




உம்மியம்பட்டு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு **ரூ. 1.24 இலட்சம்** மதிப்பிலான **பேவர் பிளாக் தரை.**



காட்டிநாயனப்பள்ளி, ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு **ரூ. 1.06 இலட்சம்** மதிப்பிலான **பேவர் பிளாக் தரை.**

# அரூர், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளிக்கு 16 கணினிகள் கொண்ட கணினி ஆய்வகம்

## ₹ 5.14 இலட்சம்

அரூர், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில், ஆசிரியர்கள் இணைய வழி மூலம் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கவும், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையிலும், ஐ.வி.டி.பி நிறுவனம் அப்பள்ளிக்கு **ரூ. 5.14 இலட்சம்** மதிப்பிலான **16 கணினிகள் கொண்ட கணினி ஆய்வகத்தை** வழங்கியது.





“தோல்வி அடைந்தவன் மாற்ற வேண்டியது வழிகளைத் தான் இலக்கை அல்ல..”

# கிருஷ்ணகிரி IELC நடுநிலைப் பள்ளிக்கு ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள் & சுற்றுச்சுவர்

₹ 2.44 இலட்சம்



கிருஷ்ணகிரி, IELC நடுநிலைப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களின் கல்வித் தரம் உயர வேண்டும் என்ற நோக்கத்தில், **ரூ.1.79 இலட்சம்** மதிப்பிலான **3 ஸ்மார்ட் போர்டு** உபகரணங்களை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியது.

கிருஷ்ணகிரி, IELC நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி, அப்பள்ளி வளாகத்திற்கு **ரூ. 65 ஆயிரம்** மதிப்பிலான **சுற்றுச்சுவரைக்** கட்டி வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



## கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு விரைவான இணையப் பயன்பாட்டிற்காக ஐ.வி.டி.பி.யின் நிதியுதவி ரூ. 20 ஆயிரம்

இணையமில்லாமல் இவ்வுலகம் இயங்காது என்னும் வகையில் காலத்தின் சூழலுக்கேற்ப கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியின் விரைவான இணையப் பயன்பாட்டிற்காக, ஐ.விடி.பி நிறுவனம் **ரூ. 20 ஆயிரம்** வழங்கியது.

## கற்றல் திறனை மேம்படுத்த கல்லூரிகளுக்கு
# ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள்

## ₹ 7.5 இலட்சம்



**திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில்** கற்பித்தல் மற்றும் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் அக்கல்லூரிக்கு **ரூ.2.1 இலட்சம்** மதிப்பிலான **ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள்.**



**வேட்டவலம் இலயோலா கல்லூரி**யில் பயிலும் மாணவர்களின் கல்வி பயன்பாட்டிற்காகவும், கற்றலை எளிதாக்கும் வகையிலும் **ரூ.5.4 இலட்சம்** மதிப்பிலான **ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள்.**

## முதன்மைக் கல்வி அலுவலகப் பயன்பாட்டிற்கு
# கணினி - பிரிண்டர்

## ₹ 82 ஆயிரம்



கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகப் பணிகளுக்கு உதவிடும் வகையில், கல்வித் துறையினர் விடுத்த வேண்டுகோளையேற்று நவீன வசதிகளைக் கொண்ட **ரூ. 82 ஆயிரம்** மதிப்பிலான **கணினி** மற்றும் **பிரிண்டர்** இயந்திரங்களை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார்.



“ உழைத்து பெற வேண்டியது வருமானம், உணர்ந்து பெற வேண்டியது தன்மானம். ”

## திருப்பத்தூர் மேரி இம்மாகுலேட் பள்ளியின் பவள விழா ஆண்டை முன்னிட்டு

# ஸ்மார்ட் போர்டு

## ₹ 9.84 இலட்சம்




ஐ.வி.டி.பி நிறுவனம், இணைய வழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பள்ளி மாணவிகள் பயனடையும் வகையில், திருப்பத்தூர் நகரில் கடந்த 75 ஆண்டுகளாக சிறப்புற கல்விப் பணியாற்றி வரும் மேரி இம்மாகுலேட் பள்ளியின் பவள விழாவை முன்னிட்டு, அப்பள்ளிக்கு **ரூ. 6.15 இலட்சம்** மதிப்பிலான **20 ஸ்மார்ட் டிவிக்கள்** (43" LED TV), **ரூ. 2.60 இலட்சம்** மதிப்பிலான **ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள்** மற்றும் **ரூ. 1.09 இலட்சம்** மதிப்பிலான **ஒளிப்பட வீழ்த்தி** (PROJECTOR) என மொத்தம் **ரூ. 9.84 இலட்சம்** மதிப்பிலான உபகரணங்களை வழங்கியது.

## அத்திமுகம் உண்டு உறைவிடப் பள்ளியின்
## 120 குழந்தைகளுக்கு டிரங்க் பெட்டிகள்

## ₹ 1.32 இலட்சம்



கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திமுகம் உண்டு உறைவிடப் பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக **ரூ. 1.32 இலட்சம்** மதிப்பிலான **120 டிரங்க் பெட்டிகளை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.




# திருப்பூர் செயிண்ட் ஜோசப் கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கப்பரிசுகள்

**₹ 2.53 இலட்சம்**

ஐ.வி.டி.பி. நிறுவனம், கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை மட்டுமில்லாமல், பெற்றோரை இழந்த கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவ்வப்போது ஊக்கப்பரிசுகளையும் வழங்கி வருகிறது. அவ்வகையில் திருப்பூர் செயின்ட் ஜோசப் மகளிர் கல்லூரியில் பயிலும் **20 ஆதரவற்ற ஏழை மாணவிகளுக்கு ரூ.13,500/-** மதிப்பிலான **டைட்டான் வாட்ச்கள்,** மற்றும் **20 மாணவிகளுக்கு ரூ. 2.4 இலட்சம்** மதிப்பில் தலா **2 கிராம்** எடையிலான **தங்க காதணிகள்** என மொத்தம் **ரூ. 2.53 இலட்சம்** மதிப்பிலான ஊக்கப்பரிசுகளை வழங்கினார் ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர்.






“ பொய் சொல்லி தப்பிக்காதே, உண்மையை சொல்லி மாட்டிக்கொள். பொய் வாழவிடாது, உண்மை சாக விடாது. ”

## கல்லூரி மாணவியர் தையற்பயிற்சி பெற

# தையல் இயந்திரங்கள்

**₹ 2.13 இலட்சம்**

மாணவியர் கல்லூரியில் பயிலும் காலத்திலேயே ஏட்டுக்கல்வியோடு, தொழிற்கல்வியையும் பெற்று எதிர்காலத்தில் தங்கள் வாழ்வாதாரத்தை தாங்களே தேடிக்கொள்ளும் பொருட்டு, கல்லூரி மாணவியர் தையற் பயிற்சி பெறும் நோக்கில், கீழ்காணும் கல்லூரிகளுக்கு **ரூ.2.13 இலட்சம்** மதிப்பிலான தையல் இயந்திரங்களை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



ஏலகிரி,
தொன் போஸ்கோ
கல்லூரிக்கு
**₹ 62,000**
மதிப்பிலான
**10 தையல் இயந்திரங்கள்**

ஒசூர்
செயிண்ட் ஜோசப்
கல்லூரிக்கு
**₹ 89,100**
மதிப்பிலான
**9 தையல் இயந்திரங்கள்**

வேலூர்
அக்ஸிலியம்
கல்லூரிக்கு
**₹ 62,000**
மதிப்பிலான
**10 தையல் இயந்திரங்கள்**

# வடகிழக்கு மாநிலங்களுக்கு ஐ.வி.டி.பி.யின் கல்விச் சேவைகள்

**₹ 8.26 இலட்சம்**






**திரிபுரா மாநிலத்தின் மொகர்பரா** பகுதியில் செயல்பட்டு வரும் **நோட்டர் டேம் ஹோலி கிராஸ் பள்ளி**யின் விடுதியில் மலைவாழ் குழந்தைகள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். அப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், அப்பள்ளிக்கு **ரூ. 4.6 இலட்சம்** மதிப்பிலான **25KVA ஜெனரேட்டரை** நன்கொடையாக ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார். **இதுவரை இப்பள்ளியின் கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் ரூ. 22.8 இலட்சம் வழங்கியுள்ளது.**

**அருணாச்சலப் பிரதேசத்தில்** வாழும் ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வியைத் தடையின்றி பயிலும் வகையில் 18 கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக **தலா ரூ. 10,000/-** என **ரூ. 1.80 இலட்சம்** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார். **மேலும் இம்மாநிலத்தின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டுப் பணிகளுக்காக இதுவரை ரூ.4.30 இலட்சம் ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.**

## வடகிழக்கு மாநிலங்களுக்கு ஐ.வி.டி.பி.யின் கல்விச் சேவைகள்

**மேகாலயா மாநிலத்தின் மக்கன்ரூ கிராமத்தில்** செயல்படும் **ஹோலி கிராஸ் மேல்நிலைப் பள்ளி**க்கு **ரூ. 1.86 இலட்சம்** மதிப்பிலான **கண்காணிப்பு கேமராக்களை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம். **இதுவரை இப்பள்ளியின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.46.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.**



**இதுமட்டுமின்றி, திரிபுரா மாநிலத்தின் ஜஸ்ட் சுய உதவிக்குழு அமைப்பின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.24.66 இலட்சம், ஆஷா சமூகப் பணி மையத்தின் சமூக மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.59 ஆயிரம் என இதுவரை வட கிழக்கு மாநிலங்களின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.98.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

## கவிதை

### வீறு கொண்டெழு பெண்ணே!

சிறுக சிறுக சேமிக்கும் பெண்ணினமே!
உமது சேமிப்பை யாருடைய பையிலும் போட்டுவிடாதே
நம்பிக்கையுடன் ஐ.வி.டி.பி நிறுவனத்தில் போடு!

அது பெருந்தொகையாக மாறும்.
கடவுள் கருணையில் படைக்கப்பட்ட உன்னதம் நீ!
தனக்கென வாழாமல் குடும்பம் குழந்தைகளுக்காக வாழும் தியாகக் குணமே!
ஐ.வி.டி.பி யில் சேமித்து கொண்டே இரு! – அது

உமது முதுமைக்காலத்தில் காய்த்து கனியாகும்!
ஜான்சிராணி வேலுநாச்சியார் வாழ்ந்த வீரமண்ணில்
உம்முடைய வளர்ச்சியின் வழியே மனவீரத்தைக் காட்டு!
பெண்ணென கேலி செய்யும் ஆணினத்தைக் கண்டு அஞ்சாதே!

வீறு கொண்டெழு பெண்ணே!
எறும்பின் சுறுசுறுப்பும் காக்கையின் ஒற்றுமையும்
கண்டு விழித்தெழு பெண்ணே!
உமக்கு தோணியாக ஐ.வி.டி.பி இருக்க!

நீ முடங்கி கிடப்பதேன்!
அடுப்பூதும் பெண்ணிற்கு படிப்பெதற்கு எனும்
வாசகத்தை ஐ.வி.டி.பி நிறுவனம் மாற்றும்!
உன்னுடைய சேமிப்பும் மன தைரியமும் உம்மை உயர்த்தும்!

துணிந்தெழு! உன் திறமையை வெளிகாட்டு!
பெண்ணே! நீ சிகரத்தை அடைய வேண்டுமெனில்
ஐ.வி.டி.பி யில் சேமித்து கொண்டே இரு!
உன் வாழ்க்கைத் தரம் ஒரு நாள் உயரும்!
என்ற நம்பிக்கையில்....!!!



✦ திருமதி. வாசுகி, ஐ.வி.டி.பி மாதேப்பட்டி கிளை.

“ வாழ்வில் நீ சந்திக்கும் ஒவ்வொரு துன்பமும்... உன்னை ஒரு படி மேலே ஏற்றிடவே வருகின்றன! மனம் தளராதே! ”

# விளிம்புகளில் வாழும் மனிதம்

**₹ 1.22 கோடி**

## ஐ.வி.டி.பி.யின் இருளர் இன மக்கள் மேம்பாட்டுப் பணிகள்



ஊருக்கு ஒதுக்குபுறமாய், சொந்த வீடற்று, நிலமற்று, காடு மேடுகளிலும், ஊரின் எல்லையிலும் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களைப் பற்றி இன்றும் பலர் அறிந்திருக்கவில்லை என்பது வேதனையான ஒன்று. இவ்வாறு வாழும் மக்களை நாம் பலமுறைக் கடந்து சென்றிருந்தாலும், அவர்களின் போராட்டம் நிறைந்த வாழ்வு இன்னும் நம் கவனத்திற்குட்படவில்லை என்பதே நிதர்சனம்.

இவ்வாறு வாழ்பவர்கள் வேறு யாருமல்ல. **'இருளர்'** என அழைக்கப்படும் இந்தியாவில் வாழும் ஆதிபழங்குடியினர்களின் ஒரு பிரிவினர் ஆவர். **"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"** என்ற வள்ளலாரின் கூற்றுக்கிணங்க, உலகம் முழுவதையும் முடக்கிப்போட்ட கொரோனா நோய்த் தொற்று, அதைத் தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட வேளையில், விளிம்பு நிலையில் வாழும் இருளர் இன மக்கள் உணவிற்கு வழியின்றி தவித்த போது, அவர்களின் பசியாற்ற உதவிக்கரம் நீட்டியது ஐ.வி.டி.பி நிறுவனம்.





இதுமட்டுமில்லாமல் இருளர் இன மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் குறிக்கோளோடு, ஐ.வி.டி.பி யின் வருங்கால இலக்குகளில் ஒன்றாக இருளர் இன மேம்பாட்டுப் பணிகளை அறிவித்து, அதற்கான துவக்கப்பணிகளை முடுக்கி விட்டார் ஐ,வி.டி.பி. நிறுவனத் தலைவர். அதன் விளைவாக கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் செயல்படும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களின் துணையோடு, இருளர் இன மக்களின் வாழிடங்கள் அடையாளம் காணப்பட்டு, அனைத்து இடங்களுக்கும் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்களே நேரில் சென்று முதல் கட்ட நிவாரண உதவிகளை வழங்கினார்.





**மாவட்டங்கள்**
**கிருஷ்ணகிரி**
**தர்மபுரி**
**திருப்பத்தூர்**
**மற்றும்**
**வேலூர்.**

**இருளர் இன மக்களின் வாழிடங்கள்**
**212**

**மொத்த பயனாளிகள்**
**5529**

**வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் :**
**அரிசி, தார்பாய், சோலார் விளக்கு, போர்வை**

**நிவாரணப் பொருட்களின் மொத்த மதிப்பு**
**₹ 1.22 கோடி**

# கீரனூர், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு 50 தையல் இயந்திரங்கள்

## ₹ 4.60 இலட்சம்




புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் தொன்போஸ்கோ இளைஞர் கிராமத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, **50 உறுப்பினர்களுக்கு ரூ. 4.60 இலட்சம்** மதிப்பிலான **50 தையல் இயந்திரங்களை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# மழை வெள்ளத்தால் தாயை இழந்து தவிக்கும் பெண்ணிற்கு ஐ.வி.டி.பி. நிதியுதவி

## ₹ 50 ஆயிரம்



விண்ணமங்கலம் கிளையைச் சார்ந்த துத்திப்பட்டு கிராமத்தில் செயல்பட்டு வரும் அமுதசுரபி மகளிர் மன்றத்தின் உறுப்பினராகிய திருமதி. லலிதா என்பவர் வடகிழக்கு பருவ மழை வெள்ளத்தால், மூச்சுத் தினறி இறந்ததால், அவருடைய மகள் மேனகா, ஏற்கனவே தந்தையையும் இழந்து, தற்போது பெற்றோர் இருவரும் இல்லாத நிலையில் பரிதவித்து நிற்கும் போது, அவருடைய கல்விப் பயன்பாட்டிற்காக, ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு.குழந்தை பிரான்சிஸ் அவர்கள் **ரூ.50,000/-** வழங்கி உதவினார்.



❝ எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும், நீங்கள் சாதிக்க பிறந்தவர் என்பதை நினைவில் வையுங்கள். ❞

# கிருஷ்ணகிரி மாவட்ட பத்திரிக்கையாளர் மன்றத்திற்கு LED TV, கணினி & பிரிண்டர்

## ₹ 1.08 இலட்சம்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிதாக துவங்கப்பட்டுள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தின் பயன்பாட்டிற்காக **LG LED 55" TV** மற்றும் **கணினி, பிரிண்டர்** ஆகியவற்றை அதன் நிர்வாகிகளிடம் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார். இதன் மொத்த மதிப்பு **ரூ. 1.08 இலட்சம்.**

# கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் சிசிடிவி கேமராக்கள் பொருத்த நிதியுதவி

## ₹ 10 இலட்சம்

கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள அனைத்து தெருக்களிலும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், சிசிடிவி கேமராக்கள் பொருத்த நகராட்சித் தலைவர் விடுத்த வேண்டுக்கோளையேற்று, ஐ.வி.டி.பி யின் பங்களிப்பாக **ரூ. 10 இலட்சத்திற்கான** காசோலையை, கிருஷ்ணகிரி நகர்மன்றத் தலைவர் **பரிதா நவாப்பிடம்,** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார்.



## நீவீர் ஒரு சிறப்பதிகாரம்!

செந்தமிழும் செங்கனியும் இரண்டறக் கலந்து
இனிமையும் பெருமையும் சேர்க்கும் சேலம் மாவட்டம்
கண்டெடுத்த விந்தை (குழந்தை) நாயகன்!
அன்பை அடிக்கல்லாகவும் திறமையைப் படிக்கல்லாகவும்
பொறுமையைக் கவசமாகவும் புன்னகையை அணிகலனாகவும் கொண்டு
மக்கள் மனதில் மகசேசே விருதினைப் பெற்று
விழி நீர் கண்ட வீர கர்ணனாய் விளங்கும்
உம்மை தித்திக்கும் தேன் தமிழால் வாழ்த்துகிறோம்!

படிப்பறியா ஏழைகளின் பரமபுத்திரன்!
அன்போடு பண்பும் கூட்டி அறிவோடு இரக்கமும் சேர்த்து
ஏழை மாணவரின் வாழ்விருட்டில் எரிகின்ற சுடர்விளக்கே!
கல்விக்கண் திறப்பதில் கருணை நிறை பெருவளமே!
தூய மரியன்னை பள்ளி கண்ட மாணிக்க வைரமே!
கணினி தந்து கல்விக்கண் திறந்த காவியத் தலைவனே!
மாந்தர்களின் இதயங்களில் மலர்ந்த இலக்கியத் தாமரையே!
உம்மை வாஞ்சையோடு வாயார வாழ்த்துகிறோம்!

வளர்ச்சி படைக்கும் புகழ்ச்சி நாயகன்!
மதங்கள் கடந்து மனிதநேயம் காக்கும் மகத்துவ மணிமகுடம்!
இன்னல் பல கடந்து இனிதாய் வாழ பாதை வகுக்கும் பண்பாளன்
ஐயா குழந்தை பிரான்சிஸ் அவர்களே!
நீவிர் மனிதர் அல்ல மகான் என்பேன்!
இதையும் நீர் மறுப்பீர் புகழ்ச்சியை வெறுப்பீர்
மக்களே என் சொத்து என்பீர்!
உம்மை உளமாற உவகையோடு வாழ்த்துகிறோம்!

தர்ம யுத்தத்தின் கொடை வள்ளல்!
இனிய உம் பேச்சால் இதயம் பல வென்றவர்
ஜெபத்தால் ஜெயம் கண்டவர்
பெயர்கேற்ப குழந்தை மனம் கொண்டவர்
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பினை
எமக்கெல்லாம் கற்றுத் தந்தவரே!
உம்மை கனிவாக இனிதாய் வாழ்த்துகிறோம்!

ஐயா நீவீர்!
காற்றையும் கவர்ந்திழுக்கும் எழுத்ததிகாரம்!
உற்றாரையும் உவக்க வைக்கும் சொல்லதிகாரம்!
ஏழைக்கு வாழ்வளிக்கும் பொருளதிகாரம்!
மொத்தத்தில் நீவீர் ஒரு சிறப்பதிகாரம்!
நாடும் ஏடும் வீடும் போற்றும் உம் நற்சேவையாலே
நீங்காப் புகழுடன் மாறாப் புன்னகையுடன்
எல்லா நலமும் வளமும் பெற்று
பல்லாண்டு வாழ இறையருள் வேண்டுகிறோம்
வாழ்க நீர் எம்மான்! இவ்வையகம் தழைக்கவே!

✦ அன்புடன்,
தாளாளர், தலைமையாசிரியர், ஆசிரிய – அலுவலக பெருமக்கள்
மாணவச் செல்வங்கள், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, அரூர்.



## ஐ.வி.டி.பி கனவுகள் அரங்கேறட்டும்!!!

நான்கு முறை காணாது ஐந்தாம் முறையாக நான் கண்ட உன்னதம்!
இங்கு நான் முகமுகமாய் காணும் அண்ணனெனும் அற்புதம்!
வார்த்தைகள் வரவில்லை . . . விழிகளில் கண்ணீர் ததும்பல்!
எங்கள் பள்ளிக்கு ஏதாவது செய்வீர் என்று ஆசையில் அல்ல!
ஆயிரமாயிரம் குடும்பங்கள், ஆயிரமாயிரம் உள்ளங்கள்
உம்மை வாழ்த்துகின்றதே என்ற நெகிழ்ச்சியில் . . . ..!

வந்து அமர்ந்து, கண்களை சுழலவிட்டு பார்த்த போது
உள்ளத்திலே ஏதோ ஆத்மார்த்தமான பாச உணர்வு பொங்குது!
எம் எண்ணங்கள் உத்தமராகிய நீர் நன்கு வாழ வேண்டுமென வாஞ்சிக்கின்றன!
உம்மை பெற்றவர்கள் பாக்கியத்திலும் பாக்கியம் செய்தவர்கள்!
புகழ்ச்சிகளை அளவே இல்லாமல் உம் செவிகள் கேட்டிருக்கும்!
ஆனால் அண்ணா! இது உள்ளத்தின் ஆத்மார்த்தமான
வார்த்தைகள் . . . !

மனித இனம் மட்டுமின்றி பரலோகமும் உம்மை வணங்கும்!
ஏன் நம்மை படைத்த ஆண்டவனே பெருமைப்படுவார்!
உம்மை படைத்ததை எண்ணி . . .
நீர் செய்திடும் சேவைகளை பலர் சொல்ல கேட்டிருக்கிறேன்
உம் சேவைகள் தொடர்ந்திட . . . உம் ஆயள் நீளட்டும்!
ஆயட்காலம் முழுதும் உடல் நலங்கள் பெருகட்டும்!

சந்தோஷங்களும், சமாதானங்களும் உமை திக்குமுக்காடச் செய்யட்டும்!
அடுத்த ஜென்மத்திலும் இதை விட அதிகமாய் ஆண்டவன் உம்மை ஆசீர்வதிக்கட்டும்!
கோடி ஆண்டுகள் நீர் வாழ என் மனம் ஏங்குது!
உம் கனவுகள் அட்டகாசமாய் அரங்கேறட்டும்!
ஆண்டவனின் அருளாசியோடு என்றும் நலமாய் வாழ
மனமும் வயிறும் நிறைந்து வாழ்த்துகிறேன்
வாழ்ந்திடுங்கள் கோடி கோடி ஆண்டுகள் . . . .!
வாழ்க! வாழ்க! வாழ்க!

✦ மேரி அமலாதாஸ், செயின்ட் அந்தோனி மேல்நிலைப்பள்ளி, சென்னை.



“ நாளை எல்லாம் நல்லபடியாக மாறிவிடும் என்று நினைப்பது நம்பிக்கை. ”

# வருகைப் புரிந்தவர்கள்



பெல்லா நிறுவனக் குழுவினர் வருகை ▲



▲ டி-லைட் நிறுவனக் குழுவினர் வருகை



▲ LG நிறுவனக் குழுவினர் வருகை

# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்கள் விபரம் (மார்ச் 2022 வரை)

✦ ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் ✦ ஐ.வி.டி.பி. கிளைகள் : 80

| விவரம் | மார்ச் 2021 வரை | ஏப்ரல் 2021 - மார்ச் 2022 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.–யிலுள்ள மொத்த சுய உதவிக்குழுக்கள் | 14676 | 679 | 15355 |
| மொத்த சுய உதவிக்குழுக்கள் உறுப்பினர்கள் | 264168 | 10185 | 274353 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்தச் சேமிப்பு | ₹ 875.60 கோடி | ₹ 124.20 கோடி | ₹ 999.80 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப் பங்கீடு | ₹ 661.00 கோடி | ₹ 66.00 கோடி | ₹ 727.00 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2021 வரை | ஏப்ரல் 2021 - மார்ச் 2022 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 4491.26 கோடி | ₹ 767.25 கோடி | ₹ 5258.51 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ₹ 3730.22 கோடி | ₹ 308.91 கோடி | ₹ 4039.13 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ,வி.டி.பி. கடன் தொகை | ₹ 206.26 கோடி | ₹ 37.21 கோடி | ₹ 243.47 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 207.24 கோடி | ₹ 22.79 கோடி | ₹ 230.03 கோடி |
| **மொத்தம்** | ₹ 8634.98 கோடி | ₹ 1136.16 கோடி | ₹ 9771.14 கோடி |

| மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. | மார்ச் 2021 வரை | ஏப்ரல் 2021 – மார்ச் 2022 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5 கோடி | - | ₹ 5 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2 கோடி | - | ₹ 2 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ₹ 38 கோடி | ₹ 9.36 கோடி | ₹ 47.36 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.86 கோடி | ₹ 5.30 இலட்சம் | ₹ 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 0.62 கோடி | ₹ 3.10 கோடி | ₹ 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | - | ₹ 1.22 கோடி | ₹ 1.22 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் : குடிசை தீ விபத்து நிதியுதவி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள், தையல் பயிற்சிகள், உறுப்பினர்களுக்கான வெள்ள நிவாரணப்பணி | ₹ 54 இலட்சம் | ₹ 21.67 இலட்சம் | ₹ 0.76 கோடி |
| மருத்துவமனை, சிறைகள் தொழுநோயாளிகள், முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ₹ 1.92 கோடி | ₹ 29.50 இலட்சம் | ₹ 2.22 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ₹ 45.42 இலட்சம் | ₹ 1.30 இலட்சம் | ₹ 46.72 இலட்சம் |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 5.87 கோடி | ₹ 9.57 கோடி | ₹ 15.44 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 22.95 கோடி | ₹ 1.85 கோடி | ₹ 24.80 கோடி |
| ஊக்குனர் மற்றும் பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை | ₹ 6.54 கோடி | ₹ 75.45 இலட்சம் | ₹ 7.29 கோடி |
| கடந்த 43 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை | ₹ 88.75 கோடி | ₹ 26.43 கோடி | ₹ 115.18 கோடி |


INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT I.V.D.P TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி (Regd. No. 69/79)

## ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ. சாந்தி நகர், 3வது கிராஸ், **கிருஷ்ணகிரி-635 001, தமிழ்நாடு, இந்தியா**

04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org